3. அறிவிப்புகள்

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானம் மறுநாள் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சட்டப்பேரவை விதி 42ன் கீழ் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

4. அறிக்கை அளித்தல்.

மின்சார வாரியம்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியம் பற்றிய 18-வது அறிக்கையை மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே அளிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1970–71ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப்பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. சி. கோவிந்தராஜன் (நெல்லிக்குப்பம்).
2. திரு. எ. அ. சுப்பராஜா.
3. திரு. எஸ். சிவசுப்ரமணியன்.
4. திரு. க. முருகேசன்.
5. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
6. திரு. கே. என். குமாரசாமி.
7. திரு. என். கிட்டப்பா.
8. திருமதி சு. குப்பம்மாள்.
9. திரு. எம். சுப்ரமணிய கவுண்டர்.
10. திரு. ஜே. எஸ். இராசு.
11. திரு. வி. டி. அண்ணாமலை.
12. திரு. ஆர். என். அரங்கநாதன்.
13. திரு. க. மு. கதிரவன்.
14. திருமதி வி. ப. பழனியம்மாள்.
15. திரு. து. ப. அழகமுத்து.
16. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க, திரு. ஆர். என். அரங்கநாதன் அவர்களை இக் குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.